**<u>STARTING TIME 11.31 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 171/2019</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court on 28.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ஆனந்தா** Husband Name : பத்தவச்சலு

Address : எண். 198, ஒத்தவாடை தெரு,ஆயர்பாடி கிராமம், நெமிலி தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 65

**<u>7, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

34. தாவா சொத்தினை 07.03.1984 அன்று வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலமாக சீனிவாசலு நாயுடு அவர் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால், சரியல்ல, நாங்கள் தான் அவர் பெயரில் கிரையம் வாங்கினோம். அப்போது அந்த சொத்தை எவ்வளவு ரூபாக்கு வாங்கினோம் என்றால், செண்ட் ஒன்று ரூ.12,000/−க்கு வாங்கினோம். செண்ட் ஒன்று ரூ.12,000/−க்கு வாங்கியதாக சொல்லும் பணம் யார் கொடுத்த பணம் என்றால், சீனிவாசலு நாயுடு உட்பட அனைவரும் சேர்ந்து கொடுத்த கூட்டுக்குடும்ப நிதி ஆகும்.

35. கிரையம் பெறுவதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு கிரையப்

பணத்தை கொடுத்தோம் என்றால், கிரையத்திற்கு முன்போ, கிரையத்தின் போதோ பணம் எதுவும் கொடுக்கவில்லை, கிரையப் பதிவு செய்து 3 மாதம் கழித்து தான் பணம் கொடுத்தோம். செண்ட் ஒன்று ரூ.12,000–ம் வீதம் 50 செண்ட் சொத்திற்கு ரூ.6 லட்சத்தை கொடுத்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம். அந்த கிரையப் பணம் ரூ.6,00,000/–ம் வீட்டில் இருந்ததா அல்லது வங்கியில் இருந்ததா என்றால், வீட்டில் தான் இருந்தது.

36. எனது மாமனார் பெயர் என்னவென்றால் போடி நாயுடு ஆகும். வா.சா.ஆ.1 கிரையத்தின் போது எனது மாமனார் உயிருடன் இருந்தாரா என்றால், இருந்தார். எனது மாமனார் பெயரில் கிரையம் வாங்காமல், சீனிவாசலு நாயுடுவின் பெயரில் கிரையம் வாங்கியதற்கு என்ன காரணம் என்றால், அந்த சமயத்தில் எனது மாமனாருக்கு கை, கால் வீங்கி படுக்கையில் இருந்தார், அதனால் அவர் மகன் பெயரில் வாங்கினோம்.

37. எனது மாமனாருக்கு மொத்தம் 4 மகன்கள், 5 மகள்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 கிரையத்தின் போது அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோமா என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முன்பு கூட்டுக்குடும்பத்திற்கு சொந்தமான சொத்துக்கள் எதுவும் இருந்ததா என்றால், எனது மாமனார் சம்பாதித்த ஏக்கர் 2.80 செண்ட் சொத்துக்கள் இருந்தது.

38. அந்த சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தை கிரையம் பெற்றதாக சொல்கிறேனா என்றால், அந்த சொத்தில் இருந்தும், குத்தகைக்கு பயிர் செய்த 3 ஏக்கர் நிலத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டும் சீனிவாசலு நாயுடுவின் பெயரில் கிரையம் பெற்றோம். மேற்படி

விவரங்களை எனது வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான்.

39. வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முன்பு எனது மாமனாருக்கு சொந்தமான ஏக்கர் 2.80 செண்ட் நிலம் இருந்தது என்பதற்கோ, 3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்தோம் என்பதற்கோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 1984–ம் ஆண்டு, எனது மாமனார், எனது மாமியார் மற்றும் அவர்களது 4 மகன்கள் மற்றும் 5 மகள்களை மேற்படி ஏக்கர் 5.80 செண்ட் நிலத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு பராமரிந்து வந்ததாகவும், அந்த செலவுகள் போக மீதி ரூ.6,00,000/–ம் இருந்ததாகவும், அந்த பணத்தில் இருந்து தான் வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

40. வா.சா.ஆ.1 கிரையத்தின் போது நான் சொல்லும் ஏக்கர் 5.80 செண்டில் என்ன பயிர் இருந்தது, என்ன வருமானம் வந்தது என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

41. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற சொத்துக்கான பட்டா சீனிவாசலு நாயுடுவின் பெயரில் தான் வழங்கப்பட்டது என்றால், சரியல்ல, சீனிவாசலு நாயுடுவின் பெயரில் பட்டாவே வாங்கவில்லை, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் பட்டா வாங்கினார். சீனிவாசலு நாயுடு இறந்த பிறகு கூட, என் கணவர் உட்பட யார் பெயரிலும் தாவா சொத்திற்கு கூட்டாக பட்டா வாங்கவில்லை என்றால், சரிதான்.

42. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தை சீனிவாசலு நாயுடு யாரிடம்

கொடுத்ததாக சொல்கிறேன் என்றால், என் மாமியாரிடம் கொடுத்தார். எனது மாமியார் காலமான பிறகு வா.சா.ஆ.1 கிரையப் பத்திரம் யாரிடம் வந்தது என்றால், எனது மாமியார் உயிருடன் இருந்த போதே அந்த பத்திரத்தை என்னிடம் கொடுத்து பாதுகாப்பாக வைக்கும்படி என்னிடம் சொன்னார். மேற்படி விவரங்கள் எதையும் எனது வழக்குரையிலோ, பிரமான வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தை நானாக எடுத்து சென்றுவிட்டு, அதை சீனிவாசலு நாயுடு எனது மாமியாரிடம் கொடுத்து, எனது மாமியார் என்னிடம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

43. நான் சொல்வது போல் வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் ரூ.6,00,000/– கிரையத் தொகை சொல்லப்படவில்லை என்றால், சரிதான். எனவே, கூட்டுக்குடும்ப நிதியில் இருந்து ரூ.6,00,000/–ம் கொடுத்து தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றும், அந்த சொத்தை சீனிவாசலு நாயுடு அவர் பெயரில் அவரது தனிப்பட்ட வருமானத்தை கொண்டு கிரையம் பெற்ற சொத்து என்றால், சரியல்ல. தாவா சொத்தை கூட்டுக்குடும்ப சொத்தாக அனுபவித்தாக நான் சொல்வது தவறு என்றும், அந்த சொத்தை சீனிவாசலு நாயுடு அவரது தனிப்பட்ட சொத்தாக தான் அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல.

44. இவ்வழக்கின் 1 முதல் 6 வரை பிரதிவாதிகள் சீனிவாசலு நாயுடுவின் வாரிசுகள் என்றால், சரிதான். சீனிவாசலு நாயுடு பெரியவரா, என் கணவர் பக்தவச்சலு நாயுடு பெரியவரா என்றால், சீனிவாசலு நாயுடு தான் பெரியவர். சீனிவாசலு நாயுடு உயிருடன் இருந்த போதே நாங்கள் பிரிந்துவிட்டோம் என்றால், சரிதான். அப்போது சொத்துக்களையும் பிரித்துக் கொண்டோமா

என்றால், ஆமாம், சீனிவாசலு நாயுடுவே பிரித்துக் கொடுத்தார். அப்போது பத்திரம் எதுவும் எழுதிக் கொண்டோமா என்றால், இல்லை, வாய்மூலமாக தான் பிரித்துக் கொடுத்தார்.

45. எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என சொல்லும் ஏக்கர் 2.80 செண்ட் சொத்தை அவர் உயிருடன் இருந்த போதே பிரித்துக் கொடுத்துவிட்டாரா என்றால், ஆமாம். அது போல் பிரித்துக் கொடுத்த சொத்தை அவரவர் தனித்தனியாக அனுபவித்து வருகிறோமா என்றால், ஆமாம். அவ்வாறு பிரித்துக் கொடுத்த போது 4 மகன்களுக்கு எவ்வளவு விஸ்தீரண சொத்து வந்தது என்றால், புறம்போக்கு நிலம் கொஞ்சம் இருந்தது, அதையும் சேர்த்து ஒவ்வொருவருக்கும் 80 செண்ட் வந்தது.

46. அது போல் பாகம் பிரித்துக் கொடுத்த பிறகு தான், வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தை சீனிவாசலு நாயுடு பெயரில் கிரையம் பெற்றதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். சீனிவாசலு நாயுடு வா.சா.ஆ.1–ன் மூலம் கிரையம் பெற்ற சொத்தை அவர் உயிருடன் இருந்த போதே பிரித்துக் கொடுத்துவிட்டதாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

47. எனது மாமனார் பிரித்துக் கொடுத்தாக சொல்லும் சொத்திற்கும், சீனிவாசலு நாயுடு பிரித்துக் கொடுத்ததாக சொல்லும் சொத்திற்கும் அவரவர் பெயரில் தனித்தனியாக பட்டா வந்ததா என்றால், எனது மாமனார் பிரித்துக் கொடுத்த சொத்திற்கு மட்டும் பட்டா வந்தது, சீனிவாசலு நாயுடு பிரித்துக் கொடுத்த சொத்திற்கு பட்டா வாங்கவில்லை. மேற்படி விவரங்களை எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான். எனவே, சீனிவாசலு நாயுடு உயிருடன் இருந்த போதே அவர் பெயரில் கிரையம் பெற்ற சொத்தை பாகம் பிரித்து கொடுத்ததாக சொல்வது

பொய் என்றால், சரியல்ல.

48. சீனிவாசலு நாயுடு வா.சா.ஆ.1–ன் மூலம் கிரையம் பெற்ற 50 செண்டில் யார், யாருக்கு எவ்வளவு பிரித்துக் கொடுத்தார் என்றால், சீனிவாசலு நாயுடுவே 12–1/2 செண்டை வைத்துக் கொண்டார், எனது கணவருக்கு 25 செண்டும், எனது கணவரின் மூத்த சகோதரர் கோவிந்தராஜ் நாயுடுவின் வாரிசுகளுக்கு 12–1/2 செண்டும் பிரித்துக் கொடுத்தார். எனது கணவரின் மற்றொரு சகோதரரான மணி நாயுடுவிற்கு மேற்படி சொத்தில் பாகம் எதுவும் கொடுக்கவில்லையா என்றால், இல்லை, அவருக்கு வேறு சொத்தில் பாகம் கொடுத்துவிட்டார். மேற்படி ஏற்பாட்டினை சீனிவாசலு நாயுடு உயிருடன் இருந்தபோதே செய்த வைத்தாக சொல்கிறேனா என்றால், ஆமாம். மேற்படிவாறு பாகம் பிரித்துக் கொடுத்ததாக சொல்வதற்கு பிறகு அவரவர் பெயரில் தனித்தனியாக உட்பிரிவு செய்து பட்டா பெற்றுக் கொண்டார்களா என்றால், இல்லை.

49. இவ்வழக்கின் 7–ம் பிரதிவாதி, சீனிவாசலு நாயுடு காலத்திற்கு பிறகு அவரின் வாரிசுகளிடமிருந்து 10.02.2011 அன்று வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் தாவா சொத்தினை கிரையம் பெற்றவர் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தை பொறுத்து வேல்முருகன் என்பவர் பெயருக்கு ஒப்பந்தம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. வேல்முருகன் எந்த சொத்தை வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

50. 7–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை தான் அவரிடமிருந்து 11–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். 7–ம் பிரதிவாதி

கிரையம் வாங்கிய சொத்திற்கு அவர் பெயரில் பட்டாவும் வாங்கிக் கொண்டார் என்றால், அது பற்றி தெரியாது. 7–ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தையும், பட்டாவையும் பார்த்த பிறகு தான் 11–ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக அவரது பதிலுரையில் சொல்லியுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. 11–வது பிரதிவாதி அவரது பதிலுரையிலேயே அது பற்றி சொல்லியுள்ளார் என்றும், வழக்கிற்காக வேண்டி தெரியவில்லை என பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

51. 7–ம் பிரதிவாதி பெயரில் இருந்த கிரையப் பத்திரத்தையும், பட்டாவையும், வில்லங்க சான்றையும் பார்த்த பிறகு தான் 11–ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அவருக்கு இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரம் பற்றி தெரியாது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

52. வா.சா.ஆ.8 புகைப்படங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிலத்தில் பயிர் வைத்துள்ளதை நிரூபிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். அந்த புகைப்படங்களை 22.07.2018 தேதியில் எடுத்ததாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.8 புகைப்படங்களில் உள்ள கடைகள் யாருடையது என்றால், இவ்வழக்கின் 11–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு அந்த கடையை கட்டி வாடகைக்கு விட்டுள்ளார்.

53. 11–ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற விவரம் தெரிந்து அவருக்கு 17.07.2018 அன்று அறிவிப்பு ஒன்றை அனுப்பினோம் என்றால், சரிதான். உரிய ஆவணங்களை முறையாக சரிபார்த்த பிறகு தான் தாவா சொத்தை 11–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், அவருக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால், சரியல்ல, வழக்கு

சம்மந்தமாக நானே அவரிடம் நேரடியாக தெரிவித்தேன்.

54. இவ்வழக்கில் 11-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து திருத்தப்பட்ட தாவா தாக்கல் செய்யப்பட்ட பிறகு வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை 11-ம் பிரதிவாதியிடம் நானே நேரில் தெரிவித்தேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. எனவே, 11-ம் பிரதிவாதியிடம் வழக்கு சம்மந்தமாக நேரில் தெரிவித்ததாக சொல்லவது பொய் என்றால், சரியல்ல. எங்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தானது சீனிவாசலு நாயுடுவிற்கு பாத்தியப்பட்டு, அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளிடமிருந்து 7-ம் பிரதிவாதி கிரையம் பெற்று 7-ம் பிரதிவாதியிடமிருந்து 11-ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால், வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. எனவே, 11-ம் பிரதிவாதி பெற்ற கிரயம் எங்களை கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல.

55. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சொத்திற்கான செக்குபந்தியில் எங்களுக்கு சொந்தமான சொத்து இருப்பதாக சொல்லியுள்ளது, 7-ம் பிரதிவாதியையோ, 11-ம் பிரதிவாதியையோ கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையிலும், எனது சாட்சியத்தின் அடிப்படையிலும் நான் இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்பதால், 7, 11 பிரதிவாதிகளை பொறுத்து தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

7, 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 12.37. P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.28 14:18:49 +0530